**M**

# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2015

## பன்னிரெண்டாம் வகுப்பு

**நேரம்:3.00 மணி** **கணக்குப்பதிவியல்** **மதிப்பெண்கள்:200**

பகுதி - அ

குறிப்பு: 1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
2) அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன.

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக:-** **30×1=30**

1) கொடுபட வேண்டிய செலவுகள் இருப்பு நிலைக் குறிப்பில் _______ பக்கத்தில் தோன்றும்.
2) பற்பல கடனாளிகளிடமிருந்து திரும்பப் பெற இயலாத கடன் _______ எனப்படும்.
3) 31.3.2012 அன்றைய இருப்பாய்வின்படி முதல் ரூ.5,00,000 ஆகும். ஆண்டுக்கு 6% முதல் மீது வட்டி எனில் முதல் மீது வட்டி ரூ. ______ ஆகும்.
4) ஒரு தொழில் நிறுவனத்தின் முதல் ரூ.60,000; அதனுடைய பொறுப்புகள் ரூ.40,000 எனில் தொழிலில் அதனுடைய சொத்துக்கள் ரூ. ______ ஆகும்.
5) சரிக்கட்டப்பட்ட இறுதி முதல், தொடக்க முதலை விட அதிகமாக இருப்பின் _________ ஆகும்.
6) ஒரு சொத்தின் பயனளிப்பு காலம் முடிந்த பிறகு பிறகு அதை விற்றால் கிடைக்கக்கூடிய தொகை ______ எனப்படும்.
7) விற்பனை விலை சொத்தின ஏட்டு மதிப்பை விடக் குறைவாக இருந்தால் அது ஒரு _______ ஆகும்.
8) விற்பனையிலிருந்து விற்ற பொருளின் அடக்கவிலையைக் கழிப்பதன் மூலம் _________ கணக்கிடலாம்.
9) ஆண்டுத் தொடக்கத்தில் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.72,000; ஆண்டு இறுதியில் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.48,000 எனில் சராசரி சரக்கிருப்பின் மதிப்பு _______ ஆகும்.
10) _______ ஒரு பயனுள்ள கருவியாக ரொக்க திட்டப்பட்டியல் உள்ளது.
11) சாதாரண இலாபத்தைவிட மிகுதியாக உள்ள சராசரி இலாபத்திற்கு ________ என்று பெயர்.
12) பகிர்ந்து தரா நட்டம் இருப்பு நிலைக்குறிப்பில் _______ பக்கத்தில் தோன்றும்.
13) பழைய இலாப விகிதத்திலிருந்து புதிய இலாபவிகிதத்தை கழித்தால் கிடைப்பது _______ ஆகும்.
14) பொது வெளியீடு _______ நாட்களுக்கு அதிகமாக அனுமதிக்கப்படுவதில்லை.
15) ஒரு நிறுமம், பங்கொன்று ரூ.100 மதிப்புடைய 10000 பங்குகளை பொதுமக்களுக்கு வெளியிட்டது. அவற்றில் 8000 பங்குகளை மட்டுமே, பொதுமக்கள் வாங்க ஒப்புக் கொண்டால் அந்நிறுமத்தின் ஒப்பியமுதல் ரூ. ________ ஆகும்.

**II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-**

16) முன்கூட்டி செலுத்திய காப்பீடு ________ஆகும்.
அ) சொத்து ஆ) பொறுப்பு இ) வருமானம்
17) 2012 மார்ச் 31 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.25,000, வாராக்கடன் ரூ.1,000 போக்கெழுதப்பட வேண்டும். 5% வாரா ஐயக் கடன் ஒதுக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ரூ. ________ ஆகும்.
ஆ) 1250 ஆ) 1300 இ) 1200
18) ஒற்றைப் பதிவு முறையில் வியாபாரத்தின் முதலினை அறிய தயாரிக்கப்படுகிறது.
அ) வியாபாரக் க/கு ஆ) இலாப நட்டக் க/கு இ) நிலையறிக்கை
19) 2012 ஏப்ரல் 1 அன்று கடனீந்தோர் ரூ.80,000; 2013 மார்ச் 31 அன்று கடனீந்தோர் ரூ.65,000. அவ்வாண்டில் கடனீந்தோருக்கு செலுத்தப்பட்ட தொகை ரூ.1,10,000 எனில் கடன் கொள்முதல் ரூ. _______ ஆகும்.
அ) ரூ.1,95,000 ஆ) ரூ.95,000 இ) ரூ.1,75,000
20) நிலைச் சொத்தை விறப்தால் ஏற்படும் இலாபம் பற்று செய்யப்படும் கணக்கு.
அ) இலாப நட்டக் க/கு ஆ) தேய்மான க/கு இ) நிலைச் சொத்து க/கு
21) ஒரு சொத்தின் அடக்க மதிப்பு ரூ.4,00,000 குறைந்த செல் மதிப்பு முறையில் தேய்மானம் ஆண்டுக்கு 10% நீக்கப்பட்டால் மூன்றாம் ஆண்டின் இறுதியில் அச்சொத்தின ஏட்டு மதிப்பு ரூ._______ ஆகும்.
அ) ரூ.2,91,600 ஆ) ரூ.2,80,000 இ) 3,60,000
22) நீர்மைப்பொறுப்புக்கள் என்பது
அ) நடப்பு பொறுப்புகள் ஆ) நடப்பு பொறுப்புகள் - வங்கி மேல் வரைப்பற்று
இ) நடப்பு பொறுப்புகள் + வங்கி மேல்வரைப் பற்று
23) அனைத்து செயல்பாட்டுத் தன்மை விகிதங்களும் _______ ஆல் கொடுக்கப்படும்.
அ) விகிதாச்சாரம் ஆ) சதவீதம் இ) மடங்கு
24) ரொக்க திட்டப்பட்டியல் கையாள்வது
அ) திட்டமிடப்பட்ட ரொக்க பெறுதல்கள் ஆ) திட்டமிடப்பட்ட ரொக்க செலுத்தல்கள்
இ) திட்டமிடப்பட்ட ரொக்க பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்
25) கூட்டாண்மையில் கூட்டாளிகள் இலாப நட்டத்தை பகிர்ந்து கொளவ்து _______ விகிதத்தில்
அ) அவர்களுடைய முதல் ஆ) ஒப்புக் கொணட் இ) சமமாக
26) நிலை முதல் முறையில் கூட்டாளிகளின் இலாபபங்கு பதியப்படுவது
அ) நடப்புக் கணக்கில் ஆ) முதல் கணக்கில் இ) எடுப்புக் கணக்கில்
27) தியாக விகிதம் கணக்கிடப்படுவது
அ) கூட்டாண்மைக் கலைப்பில் ஆ) கூட்டாண்மை விலகலில் இ) கூட்டாளி சேர்க்கப்படுகையில்
28) ஆதாய விகிதம் கணக்கிடபப்டுவது

அ) புதிய விகிதம் கழிக்க பழைய விகிதம் ஆ) பழைய விகிதம் கழிக்க புதிய விகிதம்
இ) பழைய விகிதம் கழிக்க தியாக விகிதம்

29) நிறுமம் விடுக்கக் கூடிய அதிகப்பட்ச அழைப்புகளின் எண்ணிக்கை
அ) ஒன்றாகும் ஆ) இரண்டாகும் இ) மூன்றாகும்

30) ஒறுப்பிழப்பு கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை ரூ.5,000; ஒறுப்பிழப்பு செய்த பங்குகளை மறுவெளியீடு செய்த வகையில் தள்ளுபடி ரூ.1,000 எனில் முதலின காப்பு ரூ. ______ ஆகும்.
அ) ரூ.1,000 ஆ) ரூ.4,000 இ) ரூ.6,000

பகுதி - ஆ **10×5=50**

**குறிப்பு: 1) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 2) அனைத்து வினாக்களுக்கும் சமமதிப்பெண்கள் உடையன. 3) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

31) முன்கூட்டி பெற்ற வருமானம் என்றால் என்ன?
32) ஒற்றைப் பதிவு முறை - வரைவிலக்கனம் தருக.
33) தேய்மானம் கணக்கீட்டு முறைகள் ஐந்தினை எழுதுக.
34) நிதிநிலைப் பகுப்பாய்வின் முக்கியத்தவம் யாது?
35) ரொக்கச் செலுத்தல்களுக்கு ஐந்து எடுத்துக்காட்டுகள் தருக.
36) நற்பெயர் என்றால் என்ன?
37) அழைப்பு முன்பணம் என்றால் என்ன?
38) எடுப்புக்கள் மீதான வட்டி ரூ.2,000க்கான சரிக்கட்டுப்பதிவு மற்றும் மாற்றுப் பதிவு தருக.
39) கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்டு நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.
அ) தொடக்க முதல் ரூ.70,000; இறுதி முதல் ரூ.75,000; கூடுதல் முதல் ரூ.17,500; எடுப்புகள் ரூ.5,000,
40) பின்வரும் விபரங்களைக் கொண்டு நேர்கோட்டு முறையில் தேய்மானம் விகிதம் கணக்கிடுக.
பொறி வகையின் அடக்கவிலை ரூ.1,30,000 நிறுவுவதற்கான செலவுகள் ரூ.20,000
இறுதி மதிப்பு ரூ.30,000 பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள்
41) கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்டு, முதல் விற்பனை விகிதம் காண்க.
விற்பனை ரூ.6,20,000; சாதாரண பங்குமுதல் ரூ.1,00,000; விற்பனை திருப்பம் ரூ.20,000; கடன்கள் ரூ.50,000, காப்புகள் ரூ.50,000
42) கமலா, விமலா என்ற கூட்டாளிகள் சமமாக இலாப. நட்டம் பகிர்ந்து வருகின்றனர். கமலா 2012 ஆண்டு முழுவதும் ஒவ்வொரு மாத இடையிலும் தொடர்ந்து ரூ.1,800 எடுத்துக் கொள்கிறார். விமலா ஆண்டு முழுவதும் அரையாண்டுக்கு ஒருமுறை ரூ.10,800 எடுத்துக் கொண்டார். ஆண்டுக்கு 5% எடுப்பு மீதான வட்டி கணக்கிடுக.
43) X மற்றும் Y என்ற கூட்டாளிகள் முறையே 3:2 விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். இருவரும் சமமாக தியாகம் செய்து Z என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். Z என்பவரின் புதிய இலாப விகிதம் 1/3 பங்காகும். புதிய கூட்டாண்மையில் கூட்டாளிகளின் இலாப பங்கு விகிதத்தை கணக்கிடுக.
44) சுரேஷ் வரையறு நிறுமம் ரூ.100 வீதம் 50,000 பங்குகளை வெளியிட்டது. அதில் 1000 பங்குகளுக்கு ரூ.2 முதல் அழைப்பு தொகையும் ரூ.3 இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பு தொகையும் செலுத்தப்படவில்லை. இப்பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பிற்கான பதிவு தருக.

பகுதி - இ **5×12=60**

**குறிப்பு:- 1) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 45வது வினாவிற்கு கட்டாயமாக விடையளி.**
**2) கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

45) அ) 31.3.2012 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.1,00,000
**சரிக்கட்டுதல்கள்:**
i) போக்கெழுத வேண்டிய வாராக்கடன ரூ.10,000
ii) கடனாளிகள் மீது 5% வாராஜயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
iii) கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.
சரிகட்டு பதிவு தந்து, இவ்விபரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக. **(அல்லது)**

ஆ) திரு. ரகுபதி என்பவர் தனது ஏடுகளை முழுமை பெறாத ஒற்றைப் பதிவு முறையில் பராமரித்து வருகிறார். 01-04-2012 மற்றும் 31-03-2013 ஆகிய நாட்களில் அவரது சொத்துக்களும், பொறுப்புக்களும் கீழ்கண்டவாறு இருந்தன.

| விபரம் | 01-04-2012 ரூ. | 31-03-2013 ரூ. |
|---|---|---|
| கையில் ரொக்கம் | 10,000 | 15,000 |
| பற்பல கடனாளிகள் | 80,000 | 95,000 |
| முதலீடுகள் | 20,000 | 20,000 |
| அறைகலன் | 5,000 | 5,000 |
| பற்பல கடனீந்தோர் | 50,000 | 60,000 |
| சரக்கிருப்பு | 35,000 | 65,000 |

அவர் அவ்வாண்டில் ரூ.20,000 கூடுதல் முதல் போட்டார். அவர் தனது சொந்த செலவிற்காக ரூ.40,000 திரும்ப எடுத்துக் கொண்டார்.
2012 - 13ம் ஆண்டிற்கான அவரது இலாப நட்டம் கண்டறிக.

46) தேய்மானத்திற்கு வரைவிலக்கணம் தருக. தேய்மானம் நீக்க வேண்டியதின் தேவைகள் யாவை?

47) ரொக்க திட்டப்பட்டியலின் பொருள் தந்து, அதன் தன்மைகள் மற்றும் நன்மைகளை எழுதுக.

48) ஆதாய விகிதத்திற்கும், தியாக விகிதத்திறகும் உள்ள வேறுபாடுகள் யாவை?

49) சக்தி வரையறு நிறுமம் 01.04.2012 அன்று ரூ.2,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட பிறகு அவ்வியந்திரம் ரூ.1,45,000 விற்கப்பட்டது. ஆண்டு தோறும் 10% குறைந்த செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. ஆண்டுதோறும் கணக்குகள் மார்ச் 31ல் முடிக்கப்பெறுகின்றன.

இயந்திர கணக்கு மற்றும் தேய்மானக் கணக்கு மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.

50) பின்வரும் விபரங்களைக் கொண்டு நடப்பு விகிதம், நீர்ம விகிதம் மற்றும் துல்லிய நீர்மை விகிதம் முதலியவற்றைக் கணக்கிடுக.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| ரொக்கம் | 12,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 20,000 |
| சரக்கிருப்பு | 44,000 | வங்கி மேல் வரைப்பற்று | 6,000 |
| கடனாளிகள் | 1,04,000 | குறுகிய கால முதலீடுகள் | 40,000 |
| கடனீந்தோர் | 92,000 | செலுத்துதற்குரிய மாற்றுசீட்டு | 12,000 |

51) பாபு, சந்திரா என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாக பகிர்ந்து வந்தனர். 01-04-2012 அன்று அவர்களுடைய முதல் முறையே ரூ.60,000; ரூ.40,000 ஆகும். முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6%; எடுப்பு மீது வட்டி ஆண்டுக்கு 8% என நிர்ணயித்துள்ளனர். எடுப்பு தொகை பாபு ரூ.8,000; சந்திரா ரூ.4,000. பாபு ஆண்டுக்கு ரூ.8,4000 ஊதியமாகவும் சந்திரா கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 10% கழிவாகவும் பெறுகின்றனர். மேற்கண்ட சரிக்கட்டுதல்களுக்கு முன் தொழிலில் 2013 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான நிகர இலாபம் ரூ.54,000.

இலாப நட்ட பகிர்வு கணக்கையும், கூட்டாளிகளின் முதல் கணக்கையும் தயார் செய்க.

52) குளோபல் வரையறு நிறுமம் பங்கொன்று ரூ.100 வீதம் 20,000 பங்குகளை 10% தள்ளுபடியில் வெளியிட்டது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | ரூ. |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | 30 |
| ஒதுக்கீட்டின் போது | 30 (தள்ளுபடியுடன்) |
| முதலாது மற்றும் இறுதி அழைப்பின்போது | 30 |

18000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அனைத்தும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்து தொகையும் பெறப்பட்டது. இதற்கான குறிப்பேட்டு பதிவு தருக.

## பகுதி - ஈ **3×20=60**

**குறிப்பு:- 1) எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 53-வது வினாவிற்கு கட்டாயமாக வியைடளி.**

**2) அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள் உடையது.**

53) அ) திரு. அருள் என்பவர் ஒற்றைப் பதிவு முறையில் தன் ஏடுகளை வைத்துள்ளார். 01-04-2012 அன்று அவருடைய முதல் ரூ.5,00,000, மற்ற தகவல்கள் வின்வருமாறு:-

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 2,50,000 | நிலம், கட்டிடம் (31.3.2013) | 4,00,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 50,000 | அறைகலன் (31.3.2013) | 7,200 |
| ரொக்க விற்பனை | 2,00,000 | இறுதிச் சரக்கிருப்பு | 2,60,000 |
| பற்பல கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கம் | 60,000 | பற்பல கடனாளிகள் - இறுதி இருப்பு | 80,000 |
| பற்பல கடனாளிகள் - தொடக்க இருப்பு | 40,000 | பற்பல கடனீந்தோர் - இறுதி இருப்பு | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் - தொடக்க இருப்பு | 1,83,000 | ரொக்கம் இறுதி இருப்பு | 55,000 |
| வியாபாரச் செலவுகள் | 1,20,800 | | |

2013 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கு, இலாப நட்டக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பும் தயார் செய்க. **(அல்லது)**

ஆ) சூர்யா, ஆர்யா, நாகையா என்ற கூட்டாளிகள் முறையே 3:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 31.12.2013 ஆம் நாளைய அவர்களது இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு.

31.03.2013 நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புக்கள் | | ரூ. | செலுத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | | 50,000 | ரொக்கம் | 1,36,000 |
| செலுத்துதற்குரிய மாற்று சீட்டு | | 30,000 | பற்பல கடனாளிகள் | 58,000 |
| பொதுக்காப்பு | | 60,000 | சரக்கிருப்பு | 72,000 |
| வங்கி மேல்வரைப்பற்று | | 24,000 | அறைகலன் | 14,000 |
| முதல் கணக்குகள்: | | | கட்டிடம் | 2,00,000 |
| சூர்யா | 1,60,000 | | இலாப நட்டக் க/கு | 24,000 |
| ஆர்யா | 1,00,000 | | | |
| நாகையா | 80,000 | 3,40,000 | | |
| | | 5,04,000 | | 5,04,000 |

பின்வரும் பகிர்வுகளுக்குப் பிறகு 2013 ஏப்ரல் 1 அன்று நாகையா விலகினார்.

1) நற்பெயரை ரூ. 60,000 என மதிப்பீடு செய்வது

2) கட்டிடத்தின மதிப்பை ரூ.40,000 என மதிப்பேற்றம் செய்வது
3) அறைகலன் மீது ரூ.3,000 தேய்மானம் நீக்குவது
4) வாராஜயக்கடன் ஒதுக்கு ரூ.1,000 உருவாக்குவது
5) நாகையா என்பவருக்கு சேர வேண்டிய தொகை உடனடியாக செலுத்துவது.
மறு மதிப்பீடு க/கு, முதல் க/கு, ரொக்க க/கு, மற்றும் புதிய கூட்டாண்மையின் இருப்பு நிலைக்குறிப்பு ஆகியவற்றை தயார் செய்க.

54) திரு. கார்த்திக் அவர்களின் ஏடுகளிலிருந்து 31.03.2013 அன்று எடுக்கப்பட்ட இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளது. 31.03.2011 நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்டக் க/கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பும் தயார் செய்க.

**31.03.2013 ஆம் நாளைய இருப்பாய்வு**

| பற்று இருப்புகள் | ரூ. | வரவு இருப்புகள் | ரூ. |
|---|---|---|---|
| கொள்முதல் | 1,25,000 | முதல் | 2,50,000 |
| பற்பல கடனாளிகள் | 90,000 | பற்பல கடனீந்தோர் | 60,000 |
| முதலீடுகள் | 50,000 | விற்பனை | 1,60,000 |
| வாடகை | 10,000 | கழிவு பெற்றது | 10,000 |
| உள்தூக்கு கூலி | 5,000 | செலுத்துதற்குரிய மாற்றுசீட்டு | 20,000 |
| சம்பளம் | 25,000 | | |
| பொதுச் செலவுகள் | 15,000 | | |
| ரொக்கம் | 25,000 | | |
| தொடக்க சரக்கிருப்பு | 85,000 | | |
| இயந்திரம் | 50,000 | | |
| எடுப்புக்கள் | 20,000 | | |
| | 5,00,000 | | 5,00,000 |

**சரிக்கட்டுதல்கள்:**

1) இறுதிச் சரக்கிருப்பு ரூ.1,20,000 2) கொடுபட வேண்டிய வாடகை ரூ.5,000 3) முன்கூட்டி பெற்ற கழிவு ரூ.2,000
4) இயந்திரம் மீது ஆண்டிற்கு 10% தேய்மானம் நீக்குக. 5) வாராக்கடன ரூ.2,000 போக்கெழுதுக.

55) கொடுக்கப்பட்டுள்ள இருப்பு நிலைக் குறிப்பிலிருந்து பின்வருவனவற்றை கணக்கிடுக.
1) புற - அகப் பொறுப்பு விகிதம் 2) உரிமையாளர் விகிதம் 3) நிலைச் சொத்துக்கள் விற்பனை விகிதம்
4) கடனாளிகள் விற்பனை விகிதம்

**2013 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் | 2,00,000 | நிலம் மற்றும் கட்டிடம் | 1,40,000 |
| காப்புகள் | 40,000 | பொறி இயந்திரம் | 80,000 |
| 6% கடனிட்டுப் பத்திரம் | 60,000 | அறைகலன | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | சரக்கிருப்பு | 40,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுசீட்டு | 25,000 | பெறுதற்குரிய மாற்று சீட்டுக்கள் | 30,000 |
| | | பற்பல கடனாளிகள் | 80,000 |
| | | ரொக்கம் | 10,000 |
| | 4,00,000 | | 4,00,000 |

கூடுதல் தகவல்: அந்த வருடத்திய விற்பனை ரூ.4,80,000.

56) பின்வரும் விபரங்களிலிருந்து 2012 ஏப்ரல், மே, ஜுன் மாதங்களுக்கான ரொக்க திட்டம் பட்டியலை தயாரிக்க.

| மாதம் | விற்பனை ரூ. | கொள்முதல் ரூ. | செலவுகள் ரூ. |
|---|---|---|---|
| மார்ச் 2012 | 4,00,000 | 3,00,000 | 40,000 |
| ஏப்ரல் 2012 | 5,00,000 | 5,00,000 | 60,000 |
| மே 2012 | 6,00,000 | 3,00,000 | 70,000 |
| ஜுன் 2012 | 8,00,000 | 5,00,000 | 90,000 |

1) அனைத்து விற்பனையும் ரொக்க விற்பனையாகும். 2) செலவுகள் ஒரு மாதம் கடநத் பின் செலுத்தப்படுகிறது.
3) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் ஒரு மாதம் 4) ஏப்ரல் 2012ல் பெற வேண்டிய வட்டி ரூ.10,000
5) ஜுன் 2012-ல் வாங்கப்பட வேண்டிய அறைகலன் ரூ.20,000 6) 01.04.2012ல் தொடக்க ரொக்க இருப்பு ரூ.60,000.

57) டெக்ஸ்மோ வரையறு நிறுமம் பங்கொன்று ரூ.100 வீதம் 20000 பங்குகளை ரூ.10 முனைமத்துடன் வெளியிட்டது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ.30 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ.40 (முனைமத்துடன்) |
| முதலாவது அழைப்பின்போது | ரூ.20 |
| இறுதி அழைப்பின் போது | ரூ.20 |

25000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 5000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. அனைத்து அழைப்புகளும் விடுக்கப்பட்டு அனைத்து தொகைகளும் பெறப்பட்டது. குறிப்பேட்டு பதிவுகள் தருக. வங்கி க/கு, பங்குமுதல் க/கு, பத்திர முனைம க/கு தயாரிப்பதோடு, இருப்புநிலைக் குறிப்பும் தயார் செய்க.

**************************